முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1565

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.01.2024,** வியாழக்கிழமை

1. ஞான பலம் கொண்ட அரங்கனே
   ஞானப்படைகள் உலகமெங்கும் படைத்து ஞான ஆட்சி நிறுவ
   ஞானப்பண்டிதன் என் அவதாரமாக வந்த
   ஞானியே ஆறுமுக அரங்கனே
2. ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 26 ம் நாள், 11.01.2024, வியாழக்கிழமை)
   வானவர்கள் போற்றுகின்ற மாதர்மத்தை
   வல்லமையோடு கலியுகத்தில் உலகமெங்கும் புரிகின்ற
3. புரிகின்ற அரங்கனே புண்ணியனே
   பூவுலகில் உன் நாமஜெபம் எங்கு முழங்கப் படுகின்றதோ
   மண்ணுலகில் அங்கெல்லாம் ஆறுமுகன் யான்
   மகா காட்சி தந்து உலகோர்க்கு
4. உலகோர்க்கு ஞானத்தை தந்தருள்வேன்
   உத்தமமான அரங்கன் மார்க்கமே
   கலியில் சிறந்ததென உலகுக்கு அரங்கன் வழி
   மாற்றம் நிகழுமெனக் கூறி
5. கூறியே பேரற்புதத்தை குறையில்லா
   எங்கும் நடத்தி அருள்வேன்
   அருளவே அரங்கனே நின்சக்தி பெருக
   அனுதினம் ஆசியும் ஆற்றலும் ஆக்கமும்
6. அனுதினமும் அருளி அற்புதம்
   உன் அறையில் நடத்தி வருகின்றேன்
   மாசில்லா அரங்கன் தர்மமே
   மாசில்லாத அரங்கன் ஞானமே

7. வாசிதனை உலகோர்க்கு இலகுவாக வசமாக்கி
வையகத்தில் அனைவரும் இனி பிறவாத பெரும் பேற்றுக்கு
பேற்றுக்கு பேரருள் புரிந்து
பேருலகை புண்ணிய லோகமாக்கும்

8. பிரச்சனை இல்லாத ஞான லோக மாற்றமும்
ஆற்றல்மிக்க ஞானவான்கள் ஆளும் தகுதியும்
மாற்றமாகத் தந்து அரங்கன் கொள்கையே
மண்ணுலகில் அற்புதம் நடத்தும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–